டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 28.04.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 24 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 257 - Madurai | Online Edition

# தமிழ்நாட்டில் ஏப்.30ம் தேதி 6 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

## சென்னை வானிலை மையம் தகவல்!!

சென்னை, ஏப்.27

தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, நீலகிரி, கோவை மாவட்டங்களில் ஏப்.30ல் கனமழைக்கு வாய்ப்பு எனவும் மே 1, 2ல் நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு எனவும் வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மத்திய பிரதேசத்தின் மத்திய பகுதிகள் முதல் குமரிக்கடல் வரை விதர்பா, உள் கர்நாடகா, ராயலசீமா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக இன்று (ஏப்.28)ல் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தமிழக கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். ஏனைய தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

நாளை ஏப்.29ல் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

30-04-26ல் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன மழை பெய்யக்கூடும்.

01-05-26ல் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில்) லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்யக்கூடும்.

02-05-26ல் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்யக்கூடும்.

03-05-26ல் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னையில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

# காரையார், சேர்வலாறு அணைகளின் நீர் மட்டம் கடும் சரிவு

திருநெல்வேலி, ஏப்.27

கோடை வெயில் காரணமாக திருநெல்வேலி மாவட்டம் காரையார், சேர்வலாறு அணைகளின் நீர் மட்டம் கடும் சரிவை சந்தித்துள்ளது. இரு அணைகளில் இருந்தும் 52 மெகாவாட் மின்சார உற்பத்தி முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது. எனினும், கடந்த காலங்களில் அதிகளவில் மின் உற்பத்தி செய்ததால் பாதிப்பு இல்லை என மின்வாரிய அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# அரியலூர் மாவட்டத்தில் ஆத்மா திட்டத்தின் மூலம் மாநில அளவிலான அலுவலர்களுக்கான பயிற்சி

அரியலூர், ஏப்.27

அரியலூர் மாவட்டத்தில் ஆத்மா திட்டத்தின் மூலம் மாநில அளவிலான பயிற்சிக்கு கேரள மாநிலம், திருவனந்தபுரம் சென்று வேளாண்மை அறிவியல் ஆய்வு மையம், வேளாண்மை கல்லூரி மற்றும் மத்திய கிழங்கு வகை ஆராய்ச்சி மையம், சென்றனர்.



இதில் வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக் கனி, வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தி, வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன், தோட்டக்கலை உதவி இயக்குனர் கண்ணன் மற்றும் கலைமணி, வேளாண்மை அலுவலர் மகேந்திரவர்மன், கலைச்செல்வி மற்றும் சுகந்தி, துணை வேளாண்மை அலுவலர் ராஜதுரை, வேளாண்மை உதவி அலுவலர் ராம்குமார், விற்பனை அலுவலர் கருணாகரன், ஆத்மா திட்டத்தின் வட்டார மேலாளர் செந்தில் ஆகியோர் சென்றனர். இந்த பயிற்சியானது ஐந்து நாட்கள் கொண்டதாகும் இதில் பல்வேறுப்பட்ட வேளாண்மை தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வதற்காக மாநில ஆத்மா திட்டத்தின் மூலம் சென்றனர்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் எளிமையான, சத்தான மற்றும் கண்கவர் உணவுகளே மிகவும் பொருத்தமானவை - ஓர் அலசல்

நேற்றைய தொடர்ச்சி...

### அடுப்பில்லா சமையல் குறிப்புகள் சில என்னென்ன?

**பேரிச்சம் பழ ஜூஸ்**

**தேவைப்படும் பொருட்கள்**

கொட்டை நீக்கிய பேரிச்சம்பழம் ஏழு

ஏலக்காய் பொடி ஒரு சிட்டிகை

தேன் ஒரு தேக்கரண்டி

**செய்முறை**

பேரிச்சம் பழச் சுளைகளும் நன்றாக கழுவி ஒரு கப் தண்ணீர் ஒரு மணி நேரம் அல்லது 2 மணி நேரம் ஊற வைத்து அப்படியே மிக்ஸியில் இட்டு அரைத்து ஏலக்காய் தூள்,தேன் இரண்டும் கலந்து கலக்கி சாப்பிட வேண்டும்.

**பயன்கள்**

இரும்புச்சத்து மிக்கது, எலும்பு வளர்ச்சி உகந்தது.

நரம்பு மற்றும் மூளைக்கு வலிமை தருகிறது. இருதயம் பலம் பெறும், கண் பார்வைக்கு நன்மை அளிக்கிறது.

**தக்காளி பழ ஜூஸ்**

**தேவைப்படும் பொருட்கள்**

தக்காளிப்பழம் 200 கிராம்.

தண்ணீர் 200 மில்லி.

மிளகுத்தூள் கால் டீஸ்பூன்

இந்துப்பு கால் டீஸ்பூன்



**செய்முறை**

தக்காளியை துண்டுதுண்டாக நறுக்கி மிக்ஸியில் அரைக்கவும். அத்துடன் 200 மில்லி தண்ணீரையும் மேற்கூறிய பொடிகளையும் கலந்து பருகவும். இனிப்பு சுவை வேண்டுபவர்கள் மிளகை தூள், இந்து உப்பு இவற்றை நீக்கி தேவைக்கு ஏற்ப சர்க்கரை சேர்த்து பருகலாம்.

**பயன்கள்**

உடலுக்கு நல்ல வலுவை தரும்.

நீரழிவை கட்டுப்படுத்தும், உடலில் நரம்புகளுக்கு நல்ல வலிமையை தருகிறது. தக்காளி தோலின் உள்ள நார்ச்சத்து, குடலுக்கு மிகுந்த நன்மை செய்கிறது.



# விதை பரிசோதனையின் அவசியம்!

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகள் கவனத்திற்கு, பயிர் நடவு செய்வதற்கு முன் விதைகளின் தரம் எவ்வாறு உள்ளது என்பதை அறிந்து கொள்ளவும், தரமற்ற விதைகளை விதைப்பதால் ஏற்படும் நேரம் மற்றும் பண விரயங்களை தடுப்பதில் விதைப்பரிசோதனை முக்கிய பங்காற்றுகிறது. விதைகளின் முளைப்புத்திறனை அறிந்து கொள்வதன் மூலம் தேவையான மற்றும் சரியான விதை அளவை நிர்ணயம் செய்து, கூடுதல் செலவை குறைக்க உதவுகிறது. நோய் மற்றும் பூச்சி தாக்குதலற்ற விதைகளை கண்டறிந்து அதன் மூலம் பின்னாளில் ஏற்படும் நஷ்டங் களையும் கால விரயத்தினையும் தவிர்க்க உதவுகிறது.

எனவே சாகுபடி செய்யப்படவுள்ள, விதைக் குவியல்களி லிருந்து விதை மாதிரி விதைகளை எடுத்து விதை பரிசோதனை நிலையத்தில் விதை பகுப்பாய்வு செய்து கொள்ளலாம் விதையின் முளைப்புத் திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிற இரகக்கலப்பு பரிசோதனை செய்யப்படுகின்றது. நன்கு சுத்தமான மற்றும் தரமான விதைகளை பயன்படுத்துவதால் சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும்.

ஒரு விதை மாதிரியினை ஆய்வு செய்திட ஆய்வு கட்டணமாக ரூ.80/- மட்டுமே செலுத்த வேண்டும். ஆய்வு முடிவுகள் விவசாயிகளின் முகவரிக்கே அனுப்பி வைக்கப்படுமென மூத்த வேளாண்மை அலுவலர், ஜெ.சோபனா, கேட்டுக்கொள்கிறார். மேலும் விவரங்களுக்கு மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக முதல் தளம், விழுப்புரம் என்ற முகவரியை அணுகலாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.



கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# கோவில்பட்டியில் சிறப்பு 'உணவும்–வாழ்வும்' கருத்தரங்க விழா!




தூத்துக்குடி, ஏப்.26

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சகாராவை தாண்டாத ஒட்டகம் கல்வி நிறுவனம் மற்றும் இலக்கியச் சாரல் இணைந்து உணவும் வாழ்வும் என்ற உணவு முறை அது தரும் ஆரோக்கியம் என்ற கருத்தரங்க விழா கோவில்பட்டி விஸ்வாஸ் மற்றும் சிவதாம் கல்வி அறக்கட்டளை தியான மண்டபத்தில் நடந்தது.

வானொலிப் புகழ் கிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார். நல்லாசிரியர் ப.ஜான் கணேஷ் தலைமை தாங்கினார். கோவில்பட்டி நாடார் காமராஜ் மெட்ரிக் பள்ளி முதல்வர் கி.பிரபு ஜாய், கிராம நிர்வாக அலுவலர் முருகானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தேசிய நல்லாசிரியர் விநாய சுந்தரி உடல் நலம் காக்கும் காய்கறிகள் பற்றிய ஓர் நாட்டுப்புற பாடல் பாடினார்.

சிறப்பு விருந்தினராக ஞான ஒளி மலர் இந்திராணி காய்கறி களின் மற்றும் சைவ உணவுகளின் நன்மைகள் பற்றியும், வரம் நேச்சுரல்ஸ் இயக்குநர் அழகு சங்கரேஸ்வரி மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் பயன்பாடுகள் பற்றியும், மேனாள் வேளாண் ஆசிரியர் கோ. சுரேஷ்குமார் மைக்ரோ கிரின் வளர்ப்பு முறைகள் மற்றும் பன்பாடுகள் பற்றியும் நேரடி செயல் விளக்க பயிற்சி அளித்தார். வரகவி நல்லாசிரியர் மா. முருகேசன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் தமிழாசிரியை இராதா, யதுனா டிரேடர்ஸ் உரிமையாளர் தமிழ்த்தம்பி, மேனாள் தமிழாசிரியர், போத்திராஜ் மற்றும் மேனாள் தபால் துறை அலுவலர் தவமணி உட்பட பலர் நிகழ்ச்சியல் பங்கேற்று சிறப்பு செய்தனர்.

நிகழ்ச்சியின் இறுதியாக சகாராவை தாண்டாத ஒட்டகம் நிறுவனர் தினகரன் நாம் மறந்துபோன விளையாட்டுகளை குழந்தைகளுக்கு ஞாபகபடுத்தும் விதமாக அடுத்த நிகழ்வாக நுங்கு வண்டி ரேஷ், டயர் வண்டி ரேஷ், கிட்டிபுள்ள விளையாட்டு, கிளித்தட்டு, தட்டாங்கல் விளையாட்டு பற்றி நேரடியாக குழந்தை களுக்கு விளக்கம் அளித்து உற்சாகமாக விளையாடுவதன் நோக்கம் பற்றிய விரிவான செய்தியை அறிவித்து அனைவரும் குழந்தைகளுடன் கலந்து கொண்டு பயன் பெற அழைப்பு விடுத்து கூட்டத்தை நிறைவு செய்தார்.



# விதைப் பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

விதை உற்பத்தியாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விவசாய பெருமக்களுக்கும் விதையின் உண்மையான தரத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் விதை பரிசோதனை செய்யப் படுகிறது. ஒரு விதை குவியலின் புறத்தூய்மை, முளைப்புத் திறன், பிற இரக கலப்பு, ஈரப்பதம் ஆகியவற்றை உறுதி செய்யும் விதமாக விதை பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

## புறத்தூய்மை பரிசோதனை

பயிர் அறுவடை முடிந்து, கதிரடித்து, பிரிக்கப்பட்டு எடுக்கப்படும் விதைக் குவியல்களிலிருந்து கிடைக்கும் விதைகள் உடனடியாக விதைப்பதற்கோ நடவு செய்வதற்கோ தகுதியானதாக இருக்காது. அந்த விதைகளுடன் மண், சிறு கற்கள், இலைகளின் துகள்கள், குச்சி மற்றும் பொக்கு விதைகள் கலந்து இருக்கும். எனவே அறுவடை முடிந்து பிரித்தெடுக்கப்படும் விதைகள் சுத்தமாகவும் பிற பொருட்கள் கலப்பு இன்றி இருக்கவும் சுத்தி செய்யப்பட வேண்டும். புறத்தூய்மை பரிசோதனை இதனை உறுதி செய்ய மேற்கொள்ளப்படுகிறது. புறத்தூய்மை பரிசோதனையின் போது தூய விதைகளுடன் களை விதைகள், பிற பயிர் விதைகள் மற்றும் பிற பொருட்கள் கலந்துள்ளனவா எனக் கண்டறியப் படுகிறது.

## முளைப்புத்திறன் பரிசோதனை

முளைப்புத்திறன் என்பது விதையானது உயிரும் வீரியமும் கொண்டு, கருமுளை விட்டு பின்னர் வளர்ச்சிக்கு அத்தியா வசியமான பாகங்கள் உருவாகி இயல்பான செடியாவதற்குறிய திறனே ஆகும். முளைப்புத்திறன் பரிசோதனை தூய விதை களில் இருந்து மேற்கொள்ள வேண்டும்.

முளைப்புத்திறன் பரிசோதனை மேற்கொள்ள மணல், முளைப்பு தாள்கள் மற்றும் வடிதாள்கள் பயன்படுத்தப்படு கின்றது. குறைந்தபட்சம் 400 விதைகளில் முளைப்புத்திறன் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. முளைப்புத்திறன் பரிசோதனை யின் போது நாற்றுகளை இயல்பானது, இயல்பற்றது எனவும்,

முளைக்காத விதைகளை உயிரற்றது, கடினமானது & உயிருள்ள முளைக்காத விதைகள் எனவும் வகைபடுத்தி முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

**பிற இரக கலப்பு பரிசோதனை**

விதை மாதிரிகளில் பிற இரக விதைகள் கலந்துள்ளனவா என்பதை நுண்ணோக்கி மூலம் கண்காணித்து இரகத்தின் குண நலன்களைக் கருத்தில் கொண்டு பிரித்தரியப்படுகிறது. வேளாண்மை பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்படும் வல்லுநர் விதைகளை ஒப்பீட்டு மாதிரிகளாக கொண்டு பிற ரக கலப்பு பரிசோதனை செய்யப்படுகிறது.

**ஈரப்பதம் பரிசோதனை**

விதையின் ஈரப்பதம் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கக்கூடாது. சரியான ஈரப்பத நிலையில் உள்ள விதைகள் பூச்சி மற்றும் பூஞ்சான தாக்குதல் இன்றி சேமித்து வைக்க கூடிய நிலையில் இருக்கும். ஒவ்வொரு குறிப்பிட்ட பயிரின் விதைக்கும் சரியான ஈரப்பதம் உள்ளதா என ஈரப்பதம் கண்டறியும் கருவியை கொண்டு ஈரப்பத பரிசோதனை மேற்கொள்ளப் படுகிறது. விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் அனைவரும் தங்களிடமிருக்கும் விதைகள் தரமானதா என்பதை அறிய விதை பரிசோதனை செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விதை பரிசோதனை செய்ய விதை மாதிரியுடன், விதை பரிசோதனை கட்டணம் ரூ.80/- செலுத்த வேண்டும். விதை மாதிரியுடன் பயிர், ரகம், குவியல் எண் மற்றும் தேவைப்படும் பரிசோதனை, அனுப்புநர் பெயர், முகவரி & தொடர்பு எண்ணுடன் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ விதை மாதிரியினை கொடுத்து பயன்பெறுமாறு விதைப் பரிசோதனை ஆய்வக மூத்த வேளாண்மை அலுவலர் ஜி.அஷ்ரப் முகைதீன் கேட்டுக்கொள்கிறார்.

விதை மாதரி அனுப்ப வேண்டிய முகவரி : விதைப் பரிசோதனை ஆய்வகம், லூர்து அன்னை சாலை, ஜெஸந்த் மஹால் பின்புறம், புன்னைநகர், நாகர்கோவில் -629004.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# மழை பெய்யும் ஒலி கேட்டால் விழிக்கும் விதைகள் - ஆய்வு தகவல்



பொதுவாக மழை பெய்யும் சப்தத்தை கேட்டால் நமக்கு ஒரு வித மண் வாசனையும் மன அமைதி கிடைப்பதையும் உணர்ந்திருப்போம். ஆனால் மண்ணில் விதைக்கப்பட்ட விதைகள் அந்த மழை சப்தம் அமைதியை கொடுப்பதில்லை. மாறக அவற்றை உறக்கத்திலிருந்து (SEED DORMANCY) எழுப்புகிறது.

ஆம். தாவர விதைகள் (SEED) மழையின் ஒலியைக் கேட்டு மிக வேகமாக முளைப்பதாக மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப கழக (M.I.T) விஞ்ஞானிகள் முதன்முறையாக கண்டறிந்தனர். அதாவது 40% வேகமாக முளைக்கின்றன என சயின்டிக்பிக் ரிப்போர்ட் (SCINCTIFIC REPORT) இதழில் வெளியாகி உள்ளன.

### அது எப்படி என்பதை விளக்கும் ஆய்வு?

இயற்கையில் நிலவும் ஒலியை (SOUNDS) விதைகளால் உணர முடியும் என்பதற்கான முதல் நேரடி ஆதாரம் இது ஆகும். விஞ்ஞானிகள் இந்த ஆய்விற்கு நெல் விதைகளை (PADDY SEED) பயன்படுத்தி உள்ளனர். சுமாராக 8000 விதைகளை ஆழமற்ற நீர் நிரப்பப்பட்ட தொட்டிகளில் வைத்து ஆய்வு செய்தனர். சில விதைகளுக்கு லேசான, மிதமான, கன மழை பெய்ய ஏற்பாடு செய்ய பட்டது. இது போன்ற ஒலிகளை செயற்கையாகவும் செய்யப்பட்டது.

### ஆய்வு முடிவுகள்

மற்ற விதைகளுக்கு எந்த சத்தமும் இன்றி இதே சூழலில் வைக்கப்பட்டன. மழையின் ஒலியை கேட்ட விதைகள் சத்த

மில்லாத சூழலில் இருந்த விதைகளை விட 30% முதல் 40% வேகமாக முளைக்க தொடங்கின (QUICK GERMINATION).

**என்ன காரணமாக இருக்கலாம் தெரியுமா?**

தாவர செல்களுக்குள் 'ஸ்டேடோலித்கள் ( STATOLITHS ) எனப்படும் மிகச் சிறிய துகள்கள் உள்ளன. இவை ஒரு பாட்டிலின் அடியில் இருக்கும் மணல் துகள் களைப் போன்றது. சுற்றியுள்ள திரவத்தை விட அடர்த்தி அதிகமான இத்துகள் களால் புவி ஈர்ப்பு விசையை உணரவும் செடி எந்த திசையில் வளர வேண்டும் என்பதையும் தீர்மானிக்கவும் உதவுகின்றன.

மழைத்துளிகள் தரையிலோ / நீரிலோ விழும் போது அது நீருக்கடியில் சக்தி வாய்ந்த ஒலி அலைகளை உருவாக்கிறது. இந்த ஒலியின் அழுத்தம் ஒரு ஜெட் என்சினுக்கு மிக அருகில் நிற்பதற்கு சமமானதாகும். இந்த பலமான அதிர்வுகள் விதைகளை உலுக்குகிறன. இதனால் விதைகள் இருக்கும் 'ஸ்டேடோலித்துகள்' தாங்களிடத்திலிருந்து நகர்கின்றன. இந்த இடமாற்றமே விதை முளைப்பதற்கான சமிக்ஞை. BIOLOGICAL SIGNAL). விதைக்கும் மழைக்கும் உள்ள தொடர்பை தெரிந்து கொண்டோம்.

அதனால் தான் என்னவோ நம்முடைய விவசாயிகள் விதைகளை விதைத்து விட்டு வானத்தை அண்ணாந்து பார்த்து மழைக்காக காத்திருக்கின்றனர் போல.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**




# மூலிகை சாகுபடி பயிற்சி (விதை முதல் விற்பனை வரை)

மதுரை, ஏப்.26

தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (TACED) மதுரையின் சார்பாக தமிழகத்திலுள்ள பல்வேறு மாவட்ட விவசாயிகள், விவசாய தொழில் முனைவோர்கள், மூலிகை சாகுபடி ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு நேற்று முன்தினம் 25.4.26 அன்று சிம்மக்கல் சாரதா வணிக வளாக பயிற்சி யரங்கில் செயல் அலுவலர் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. அவர் தனது உரையில், இந்த பயிற்சியானது எங்களால் நடத்தப்படும் 59வது பயிற்சியாகும். இந்த பயிற்சி யானது விதை முதல் விற்பனை வரை உள்ள நடைமுறைகள் அதில் உள்ள சிக்கல்கள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். இந்த பயிற்சியில் துளசி, வெட்டிவேர், முருங்கை, பூனைக்காலி, அஸ்வகாந்தா, நித்தியகல்யாணி, மூடகாற்றான், நொச்சி, மணதக்காளி, ஓமவள்ளி, தூதுவேளை, செம்பருத்தி, ஆடா தோடா, புதினா, பிரண்டை, நெல்லி, வெள்ளை குண்டுமணி உள்பட மூலிகை பயிர்களுக்கான சாகுபடி முறைகள் மற்றும் மண் வள அமைப்பு குறித்து வேளாண் வல்லுநர் அக்ரி சந்திரசேகரன் மற்றும் அக்ரி சிவஸ்ரீ எடுத்துக் கூறினார்கள்.

TACED C.E.O ஜெயக்குமார் மேலும் கூறுகையில் இந்த நிறுவனம் 2010ஆண்டில் துவக்கப்பட்டு முழுக்க முழுக்க மூலிகை சாகுபடி வர்த்தகம் குறித்து தான் செயல்பட்டு வருகிறது என்றார். பிரபல மூலிகை கொள்முதலிட்டார்களுடன் நேரடியாக ஒப்பந்தம் செய்யும் வழிமுறைகளை எடுத்துக் கூறினார். ஆயுர் வேத, யூனானி மருத்துவத்தில் மூலிகையின் பயன்பாடு (HER-BEL BUSINESS) நாளுக்கு நாளாக அதிகரித்து வருவதால் மூலிகை சாகுபடிக்கான எதிர்காலம் சிறப்பாக உள்ளதென தெரிவித்தார். சந்தையின் தேவையறிந்து அதற்கேற்ப மூலிகை பயிர்களை தேர்வு செய்து அவரவர் பகுதிக்கேற்ப சாகுபடி செய்யு மாறு பயிற்சியாளர்களை கேட்டுக் கொண்டார். பயிற்சியாளர்கள் சார்பாக முனைவர் முருகேசன், ரமேஷ், ரூபி சுரேஷ்பாபு, மகாதேவன் மேனகா தங்களுடைய அனுபவங்கள் பிரச்சனைகள் குறித்து பேசினார்கள். காலை முதல் மாலை வரை நடைபெற்ற பயிற்சி யில் பயிற்சியாளர்களுக்கு மதிய உணவு. தேநீர் வழங்கப்பட்டது. இறுதியாக பயிற்சியாளர் சார்பில் சுதா நன்றி கூறினார்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விவசாயிகள் அனுமதி பெற்ற நிலையங்களில் மட்டுமே தனி உரம், கூட்டு உரம் மற்றும் கலப்பு உரத்தை வாங்க வேண்டும்

## வேளாண்மை துறை அறிவுரை

அரியலூர், ஏப்.27

அரியலூர் மாவட்டத்தில் தற்போது யூரியா 3129 மெட்ரிக் டன், டிஏபி 1525 மெட்ரிக் டன், பொட்டாஷ் 701 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் உரம் 3115 மெட்ரிக் டன், சூப்பர் பாஸ்பேட் 579 மெட்ரிக் டன், இருப்பில் மாவட்டத்திற்கு போதுமான அளவு இருப்பில் உள்ளது. அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி தெரிவித்தார். வேளாண் உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன், உர விற்பனை நிலையத்தை ஆய்வு செய்தார்.



அரியலூர் மாவட்டத்தில் உள்ள உரம் விற்பனையாளர்கள் அரசு மானியத்தில் உள்ள உரங்களை, பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், அரசு மானியம் இல்லாத தனியார் தயாரிக்கும் கலப்பு உரம் மற்றும் கூட்டுரங்கள் முறையான அனுமதி பெற்று விற்பனை செய்ய வேண்டும், உர மூட்டையில் கண்டிப்பாக லாட் நம்பர், மற்றும் உற்பத்தி செய்த தேதி இருக்க வேண்டும். இத்தகைய உரங்களை விவசாயிகளுக்கு விற்பனை செய்யும் போது கண்டிப்பாக ரசீது வழங்கப்பட்டு, விற்பனை செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா மற்றும் டி ஏ பி உரங்களை பயிர்களுக்கு ஏற்ற அளவில் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். ஒரே விவசாயிக்கு அதிகமாக விற்பனை செய்யக் கூடாது.

விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப் பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக் கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது.

விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். தழைச்சத்துக்காக யூரியாவுக்கு பதிலாக நானோ யூரியா டிஏபிக்கு மாற்றாக நானோ டி ஏ பி பயன்படுத்தலாம். விவசாயிகள் உரங்களை எப்பொழுதும் சாகுபடி செய்யும் அனைத்து பெயர்களுக்கும் ஒருங்கிணைந்த உர மேலாண்மையுடன், சமச்சீர் உரங்கள் ஆன அனைத்து வகையான வேளாண்மை இயற்கை எரு, பண்ணை மற்றும் மண்புழு எரு உரம், பசுந்தால் பயிரை மடக்கி உழவு செய்தல், வேளாண்மை வட்டார மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்கள், அசோலா, நீலப்பச்சை பாசி, அனைத்து வகையான பயிர்களுக்கு தேவையான நுண்ணூட்ட சத்து உரங்களை சரியான விதத்தில் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்றும் தற்போது பொட்டாஷ் உரம் ஒரு மூட்டையின் விலை ரூ.1975, 20:20:0:13 எஃப் ஏ சி டி ரூ.1825, மற்ற நிறுவனத்தின் உரம் ரூ.1800,16: 16; 16 ஒரு மூட்டையின் விலை ரூ.2050, டிஏபி ஒரு மூட்டையின் விலை ரூ.1350, யூரியாவின் விலை ஒரு மூட்டை ரூ.266.50 பைசா,

எனவே விவசாயிகள் சாகுபடி செய்யும் அனைத்து பயிர் களுக்கும் அதற்கு ஏற்ற வகையில் எப்போதும் ஒருங்கிணைந்த

உர மேலாண்மையுடன், சமச்சீர் வகையில உரங்களை பயிர்களுக்கு தேவையான வகையில் அனைத்து வகையான உரங்களை பயன்படுத்தி செயற்கை உரங்களை தேவையான அளவு மட்டுமே பயன்படுத்தி, பயிர் உற்பத்தி செலவை குறைத்து அதிகமாக மகசூல் பெற, எப்போதும் ஒருங்கிணைந்த உர மேலாண்மையை கடைப்பிடிக்க வேண்டும், என வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன் கேட்டுக் கொண்டார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




# கடவூர் பகுதியில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

கரூர், ஏப்.27

கரூர் மாவட்டம். கடவூர் ஒன்றிய பகுதிகளில் கனிசமாக மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடவூர் வட்டார பகுதிகளில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்த விவசாயிகள் அறுவடைக்கு தயாராகி வருகின்றனர். மரவள்ளிக் கிழங்கு சாகுபடியை பொருத்தவரை சரியான நல்ல ரகங்கள் மற்றும் நிலம் தயாரிப்பு முறைகள் மிகவும் அவசியம்.

இச்சாகுபடியில் பாசன வசதி இருந்தால் வருடம் முழுவதும் எந்த மாதத்திலும் மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் நடவு செய்யலாம். இதேபோல் மானாவாரியில் சாகுபடியை தொடங்கும் போது செப்டம்பர், அக்டோபர் மாதங்கள் சாகுபடிக்கு ஏற்ற பருவமாகும்.

மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் செம்மண், கரிசல் மண் ஆகிய மண் உள்ள நிலம் சாகுபடிக்கு ஏற்றதாக இருக்கும். மண்ணில் தழைச்சத்து அதிகமாக இருக்க வேண்டும். களிமண் மற்றும் வண்டல் மண்ணில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடியை செய்யக்கூடாது.

விதை அளவு மற்றும் பயிரிடும் முறையில் விதை நேர்த்தி மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் ஒரு ஏக்கருக்கு 1900 முதல் 2000 கிலோ கிழங்குகள் தேவைப்படுகிறது. இதில் ஒவ்வொரு கரணையும் அரை அடி நீளத்துடன் 8 முதல் 10 கணுக்களுடன் இருப்பது நல்லது. விதைக்கரணைகளை பூசண மருந்துக் கரைசலில் ஊற வைத்து நடவு செய்வதால் நோய் தாக்குதலை தடுக்கலாம்.

மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் பாசன சாகுபடிக்கு இரண்டரை அடி இடைவெளியில் பராமரித்து அதே அளவு இடைவெளியில் பாரில் வரிசையாக நடவு செய்ய வேண்டும். வளமான நிலங்களுக்கு 3 அடிக்கு 3 அடி இடைவெளி போதுமானது.

மானாவாரியில் 2 அடிக்கு 2 அடி இடைவெளி பார்கள் அமைத்து நடவு செய்யலாம். நடவு செய்தவுடன் முதல் பாசனமும் அதன் பிறகு 3 வது நாள் உயிர் தண்ணீர் இட

வேண்டும். மரவள்ளிக்கிங்கு உரம் இடும் முறை பொறுத்தவரை ஒரு ஏக்கருக்கு 4 கிலோ அசோஸ்பைரில்லம் 40 கிலோ மணலுடன் கலந்து நடவு செய்ய 30 வது நாளில் இட வேண்டும்.

மரவள்ளிக்கிழங்கு சாகுபடி முறையில் இலைகள் நிறம் மஞ்சள் கலந்த பழுப்பு நிறம் கலந்து பழுப்பு நிறமாகி உதிர ஆரம்பிக்கும் போது நிலத்தில் வெடிப்புகள் உண்டாகும். இவ்வாறு இருக்கும் போது சாகுபடி செய்யப்பட்ட மரவள்ளிக் கிழங்கை அறுவடைகளை தொடங்கலாம்.

சாகுபடியை தொடங்கிய நாளில் இருந்து 240 நாட்களில் அறுவடை செய்யும் போது ஒரு ஏக்கருக்கு 15 முதல் 20 டன் வரை மரவள்ளிக்கிழங்கு கிடைக்கிறது. ஆகவே மேற்படி ஆலோசனைகளை கடைபிடித்து மரவள்ளக்கிங்கு சாகுபடி செய்தால் நல்ல மகசூல் பெறலாம் என்று முன்னோடி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# திண்டுக்கல்லில் பூக்கள் விலை சரிவு

திண்டுக்கல், ஏப்.27

திண்டுக்கல் மலர் சந்தையில் கடும் வெயிலின் காரணத்தினால் பூக்களின் வரத்து குறைந்து பூக்களின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

திண்டுக்கல் மாநகருக்கு சொந்தமான அண்ணா வணிக வளாகத்தில் மலர் சந்தை இயங்கி வருகிறது. திண்டுக்கல் மாவட்டத்தை சுற்றியுள்ள நரசிங்கபுரம், சின்னாளப்பட்டி, வெள்ளோடு, சாணார்பட்டி, கோபால்பட்டி மற்றும் அம்மாபட்டி உள்ளிட்ட கிராமபுறங்களில் இருந்து தினசரி 20 டன் பூக்கள் விற்பனைக்கு வரும். இங்கு வரக்கூடிய பூக்கள் திருச்சி, தஞ்சை, கோவை மட்டுமில்லாமல் வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஆனால், தற்போது கடும் வெயிலின் காரணமாக இந்த மலர் சந்தைக்கு 20 டன் பூக்கள் வருகை தரக்கூடிய இடத்தில் வெறும் 5 டன் பூக்கள் மட்டுமே வந்துள்ளது.

1 கிலோ மல்லிகைப்பூ 30 ரூபாய்க்கும், செவ்வந்தி பூக்கள் 20 ரூபாய்க்கும் விற்பனை ஆகிறது. பூக்கள் வரத்து குறைந்தும், பூக்களின் விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

# கொத்தவரங்காய் விளைச்சல் அமோகம்

திண்டுக்கல், ஏப்.27

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் அருகே வீரக்கல் பகுதியில் கொத்தவரங்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் காய்களை பறிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூரை அடுத்த வீரக்கல், கும்பம் பட்டி, வக்கம்பட்டி ஆகிய பகுதிகளில் செடிவகை காய்கறி வகையை சேர்ந்த கொத்தவரங்காயை ஏராளமான விவசாயிகள் ஆர்வமுடன் சாகுபடி செய்து வருகின்றனர். செடியில் கொத்துக் கொத்தாக காய்க்கும் இயல்பை உடைய இந்த காய், இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சமையலுக்கு பயன்படுத்துவதை விட, கொத்தவரை விதையிலிருந்து பிரித்தெடுக்கப்படும் பிசின் உணவுத்தயாரிப்பு தொழிலில் முக்கிய சேர்க்கைப் பொரு ளாகவும், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளிலும் அதிகம் பயன் படுத்தப்படுகிறது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பணப் பயிர்களில் முக்கியமானதாக கொத்தவரங்காய் உள்ளது.

ஜுன்-ஜுலை மற்றும் அக்டோபர்-நவம்பர் மாதங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. குறைந்த பராமரிப்புடன், 45-60 நாட்களில் அறுவடைக்கு வருவதால் விவசாயிகள் கொத்த வரங்காய் சாகுபடியில் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில், ஆத்தூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கொத்தவரை நன்கு விளைந்து அறுவடைக்கு வந்துள்ளது. இதனால் காய்களை பறிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. மேலும் இப்பகுதியில் சிறு விவசாயிகள் அதிகம் சாகுபடி செய்து வருகின்றனர். திண்டுக்கல் உழவர் சந்தையில் கிலோ ரூ.50க்கு விற்கப்படுகிறது. சில்லரை கடைகளில் கிலோ ரூ.70 வரை விற்கப்படுகிறது.



# அமராவதி அணை நீர்மட்டம் 21.49 அடியாக சரிவு

திருப்பூர், ஏப்.27

அமராவதி அணை நீர்மட்டம் 21.49 அடியாக குறைந்துள்ள உதால் குடிநீர் தட்டுப்பாடு அபாயம் ஏற்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகே உள்ள அமராவதி அணை 90 அடி உயரம் கொண்டது. இந்த அணையின் மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

மேலும் நூற்றுக்கணக்கான கிராமங்கள் குடிநீர் வசதி பெறுகின்றன. பழைய ஆயக்கட்டு பகுதிக்கு ஆற்று வழியாகவும்,புதிய ஆயக்கட்டு பகுதிக்கு பிரதான கால்வாய் வழியாகவும் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

தென்மேற்கு பருவமழை காலத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழை காரணமாக பாம்பாறு, தேனாறு, கூட்டாறு ஆகியவற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து, தூவானம் அருவி வழியாக அணைக்கு தண்ணீர் வந்து சேருகிறது. தற்போது, கோடை காலம் என்பதால் நீர்வரத்து முற்றிலும் நின்றுவிட்டது. இதனால் அணை நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.

அமராவதி அணையில் நேற்று முன்தினம் காலை நீர்மட்டம் 21.49 அடியாக இருந்தது. நீர்வரத்து இல்லை. 15 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

ஜூனில் தென்மேற்கு பருவமழை துவங்கினால் தான் அமராவதி அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கும். தற்போதுள்ள நீர்மட்டத்தில் பாதி அளவுக்கு மேல் சேறும், சகதியுமாக உள்ளது. இதனால் கோடையில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW  isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID  BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

**பயன்கள்**

பூக்கள் உதிர்வது குறையும் பயறு விளைச்சல் 20 சதம் வரை கூடும் வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்.

**TNAU நிலக்கடலை ரிச்**

ஒரு ஏக்கருக்கு தேவையான 2.20 கிலோ TNAU நிலக்கடலை ரிச் பூஸ்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் தருணத்தில் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்த்து இலை வழியாக தெளிக்க வேண்டும்.

**பயன்கள்**

அதிக பூ பிடிக்கும் திறன், குறைந்த பொக்கு கடலைகள், விளைச்சல் 15 சதம் வரை கூடும், வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்.

**TNAU கரும்பு பூஸ்டர்**

ஏக்கருக்கு 2, 3 மற்றும் 4 கிலோ முறையே கரும்பு நட்ட 45, 60 மற்றும் 75 ஆவது நாட்களில் 200 லிட்டர் தண்ணீருடன் தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்த்து தெளிக்க வேண்டும்.

**பயன்கள்**

இடைக்கணுக்களின் நீளம் கூடும் கரும்பின் வளர்ச்சி மற்றும் எடை அதிகரிக்கும் விளைச்சல் 20 சதம் வரை அதிகரிக்கும் சர்க்கரை கட்டுமானம் கூடும் வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்.

**TNAU மக்காச்சோளம்**

மேக்சிம் ஒரு ஏக்கருக்கு தேவையான 3 கிலோ கரைசலை 200 லிட்டர் தண்ணீர் மற்றும் தெளிப்பு திரவத்துடன் சேர்த்து ஆண் மஞ்சரி மற்றும் மணி உருவாகும் பருவத்தில் தெளிக்க வேண்டும்.

**பயன்கள்**

மணி பிடிக்கும் திறன் அதிகரிக்கும். விளைச்சல் 20 சதம் வரை கூடும் வறட்சியைத் தாங்கும் திறன் அதிகரிக்கும்.

**TNAU பருத்தி பிளஸ்**

ஒரு ஏக்கருக்கு தேவையான 2.5 கிலோ கரைசலை 200 லிட்டர் தண்ணீர் கலந்து பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும்.

**பயன்கள்**

பூ மற்றும் சப்பைகள் உதிர்வது குறையும் காய்கள் முழுமையாக வெடித்து, சீரான அறுவடைக்கு வழி வகுக்கிறது. விளைச்சல் 18 சதம் வரை அதிகரிக்கும் வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்.

**கவனிக்க வேண்டியவை**

செடிகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும். மாலை வேலையில் தெளிக்க வேண்டும். கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும். நல்ல நீரை பயன்படுத்தவும். பூச்சி மற்றும் நோய் மருந்துகளுடன் கலந்து தெளிக்கக்கூடாது.

**பனானா சக்தி : வாழை நுண்ணூட்டக் கலவை**

பருவமழை காரணமாக மழை நீரைத் வாழைத் தோட்டங்களி லிருந்து வடிக்கும் பொழுது வாழைக்கு மிக முக்கியமாகத் தேவைப் படும் நுண்ணூட்டச் சத்துக்குகளும், வீணாக வாய்ப்பு உள்ளது. இந்த இழப்புகளைச் சரிகட்ட, வாழைக்கு நுண்ணூட்டச் சத்துக்கள் இடுவது மிகவும் அவசியம். இதற்கு, திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின், வாழை நுண்ணுட்டக் கலவையான 'பனானா சக்தி'-யை இரண்டு சத கரைசலாக (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20 கிராம்) இலைமேல் 4, 5, 6, 7வது மாதங்களில் தெளிக்கவும்.

**பயன்கள்**

20% சதவீத கூடுதல் மகசூல், சிறந்த தரம்.

எனவே சீரிய தொழில் நுட்பங்களான இரகம் விதை நேர்த்தி விதைப்பு முறை பயிர் எண்ணிக்கை பராமரிப்பு ஒருங்கிணைந்த பயிர்ப்பராமரிப்பு இவற்றுடன் இலை வழி உரமிடும் முறையைக் கடைப்பிடித்தால் விளைச்சல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. வறட்சி காலங்களில் மண்ணில் ஊட்டச்சத்துக்களை இடுவதை விட இலை வழியாக இடுவது வாலழ மற்றும மானாவாரிப் பயிர்களுக்கு மிகவும் சிறந்ததாகும். இலை வழி உரமிடுபோது அந்த பகுதி வேளாண்மை விஞ்ஞானிகள் அல்லது வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு அலோசனை பெற்ற பின்னரே பயன்படுத்த வேண்டும்.

தகவல் : *முனைவர் ச.நித்திலா, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி, பி.ரவிச்சாமி, உதவித் தலைமை தொழில்நுட்ப அதிகாரி, தேசிய வாழை ஆராய்ச்சி மையம், திருச்சி மற்றும் முனைவர் கே.சி.சிவபாலன், தலைவர், மித்ரா பண்ணை ஆலோசனை, சுற்றுச்சூழல் மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி மையம் (CREA), திருச்சி, தமிழ்நாடு.*


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333